# வாழைக்கான விலை முன்னறிவிப்பு

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் முதலாவது முன்கூட்டிய அறிக்கையின் படி, 2019-20 ஆம் ஆண்டு இந்தியாவில் வாழை 8.77இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 317.79 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. இந்தியாவில் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கேரளா மற்றும் மஹாராஷ்டிரா ஆகியவை வாழை பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். தமிழகத்தில் கோயம்புத்தூர், தேனி, திருச்சி, கரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வாழை அதிகளவில் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் திருச்சி, திருநெல்வேலி, கடலூர், தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய முக்கிய வாழை சந்தைகளில் திருச்சி மாநிலங்களின் பல்வேறு பகுதிகளுக்கு வாழைப்பழத்தை அனுப்பும் முக்கிய மையமாக திகழ்கிறது. திருச்சி சந்தைக்கு வாழை வரத்து லால்குடி, புதுக்கோட்டை, முசிறி மற்றும் தேனி ஆகிய பகுதிகளிலிருந்து வருகிறது. தற்போது, கோயம்புத்தூர் சந்தைக்கு புதுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி மற்றும் கடலூர் ஆகிய பகுதிகளிலிருந்து பூவன் வரத்தும், சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து கற்பூரவள்ளி வரத்தும் வருகிறது. நேந்திரன் வரத்தானது மேட்டுப்பாளையம் மற்றும் கேரளாவிலிருந்து ஜனவரி, 2021 முதல் வரத்தொடங்கியுள்ளது. வர்த்தக மூலங்களின் படி, பண்டிகை காலங்கள் காரணமாக வரும் மாதங்களில் வாழையின் தேவை அதிகரிக்ககூடும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 12ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தையில் நிலவிய பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவின் அடிப்படையில் பிப்ரவரி முதல் மார்ச் 2021 மாதங்களில் பூவன் வாழையின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.25, கற்பூரவள்ளி ரூ. 35 மற்றும் நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.40

*வரை இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.*

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி- 0422-2431405*


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*பழப்பயிர்கள் துறை*
*தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி எண் - 0422-6611269*

# Price Forecast for Banana

As per the First Advance Estimates of Ministry of Agriculture & Farmer's Welfare, banana is cultivated in 8.77 lakh hectare with a production of 317. 79 lakh tonnes in 2019-20 in India. The major growing states are Maharashtra, Gujarat, Karnataka, Kerala, Tamil Nadu, Andhra Pradesh and Orissa. Major banana cultivating districts are Theni, Trichy, Erode, Thoothukudi, Coimbatore, Kanyakumari, Thanjavur and Dindigul.

Banana Market Centres in Tamil Nadu are Trichy, Tirunelveli, Cuddalore, Theni and Coimbatore. Among them, Trichy is one of the major centre for the despatch of banana to various parts of the State. At Present, banana arrivals are mainly from Lalkudi, Pudukottai, Musuri and Theni to Trichy market. In Coimbatore Market Poovan banana are usually coming to from Pudukottai, Thirukattupalli and Cuddalore. Karpuravalli arrivals are from Sathyamangalam, Gobichettipalayam and Mettupalayam. Nendran arrivals from Mettupalayam and Kerala have already commenced from January'2021. According to the Trade source demand for banana may raise mainly due to festival season.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analysed the past 12 years prices of cultivars of Poovan, Karpooravalli and Nendhran banana of Coimbatore. The results of analysis and trader survey indicated that the expected average farm gate price will be around Rs.25 per kg for Poovan, Rs.35 for Karpuravalli and Rs.40 per kg for Nendhran respectively, in Coimbatore market during February -

March’2021. Hence, farmers are advised to take appropriate selling decision accordingly.

***For further details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003.*
*Phone: 0422-2431405*

***For technical details please contact:***

*Professor and Head*
*Department of Fruit Crops*
*Horticultural College & Research Institute*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611269*